கழக ஆட்சியில் - இந்து சமய அறநிலையத்துறையில்

9 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை மீட்டோம்!

முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டி!

சென்னை, ஆக.12 -

சென்னையில் நேற்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. "நாங்கள் தூக்கத்தைக் கலைத்து முழுமையாகக் களத்தில் நின்றதால்தான், 9,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான இந்து சமய அறநிலையத்துறைச் சொத்துக்களை மீட்டிருக்கின்றோம். அதுமட்டுமன்றி, பட்டா மற்றும் சிட்டா போன்றவற்றில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்ததையும் கண்டறிந்து, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம். எனவே, கும்பகர்ணத் தூக்கம் கொண்டிருக்கின்ற ஆட்சி, இந்த ஆட்சி" என்று குறிப்பிட்டார்.

பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ.வின் பேட்டி வருமாறு:-

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலின் சொத்துக்களைப் பாதுகாத்த ஆட்சி, திராவிட மாடல் ஆட்சிதான். 2016ஆம் ஆண்டிலேயே அந்தச் சொத்துக்களின் பத்திரப் பதிவிற்குத் தடை கோரி, அன்றைய மாவட்ட வருவாய் அலுவலர்உத்தரவிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, 2021ஆம் ஆண்டிலிருந்து வெவ்வேறு மாவட்டங்களில் அந்தப் பத்திரப் பதிவை மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடத்தப்பட்டன. ஆனால், அந்த அனைத்து முயற்சிகளையும் முறியடித்த ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம்!

தூங்கிக் கொண்டிருந்தீர்களா? என்று அறநிலையத்துறை அமைச்சர் கேட்கிறார். நாங்கள் தூக்கத்தைக் கலைத்து முழுமையாகக் களத்தில் நின்றதால்தான், 9,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான இந்து சமய அறநிலையத்துறைச் சொத்துக்களை மீட்டிருக்கின்றோம். அதுமட்டுமன்றி, பட்டா மற்றும் சிட்டா போன்றவற்றில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்ததையும் கண்டறிந்து, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம். எனவே, கும்பகர்ணத் தூக்கம் கொண்டிருக்கின்ற ஆட்சி, இந்த ஆட்சி என்பதை நான் பதிவு செய்கிறேன்.

கேள்வி: திருச்சி ஸ்ரீரங்கம் திருக்கோயில் கோபுரப் பணிகளைத் தாமதப்படுத்தியது தி.மு.க. அரசுதான் என்ற குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்திருக்கிறார்?

பதில்: ஸ்ரீரங்கம் கோபுரத்தைப் பொறுத்தவரை, 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அதன் ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளின் சில பாகங்கள் உதிர்ந்து, கோபுரம் சரிந்தது. அதை அறிந்தவுடனேயே, அன்றைய மாவட்ட அமைச்சராக இருந்த அருமை அண்ணன் கே.என். நேரு அவர்களும் நானும் நேரடியாகக் களத்திற்குச் சென்று ஆய்வு செய்தோம்.

மிகப்பெரிய தனவந்தர் ஜெயபால் என்பவர் 1.75 கோடி ரூபாய் செலவில்அதனைப் புதுப்பித்துத் தருவதற்கு அனுமதி கேட்டார்; ஒரே மாதத்தில் அவருக்கு அனுமதி வழங்கினோம்.

இந்தத் திறப்பு விழாவின்போது அவரே தெளிவாக ஒரு வீடியோ பதிவைசெய்திருக்கிறார். அந்த வீடியோ பதிவில்,

"அமைச்சர்கள் உடனடியாக ஆய்வு செய்து, அனுமதி வழங்கினார்கள். நாங்கள் 40 பேரைக் கொண்டு அந்தப் பணியை மேற்கொண்டோம். கரையான் பாதிப்பு அதிகமாக இருந்ததால் பணியாற்றியவர்களுக்கு அலர்ஜி ஏற்பட்டது. ஊடகத்துறை நண்பர்களையும் கேட்டுக் கொண்டார், இப்போது நீங்கள் கேட்கிறீர்கள்.3 ஆண்டுகளாக எவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகே அந்தக் கோபுரத்தைச் வடிமைத்தோம் என்று, ஒரு நாளாவது வந்து கேட்டீர்களா? என்கிறார்.கடந்த ஆட்சி முழு ஒத்துழைப்பைத் தந்தது என்றுஅந்த ஊடகப் பதிவிலேயே அவர் சொல்கிறார்!"

ஸ்டிக்கர் ஆட்சி!

இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கின்ற கோபுரங்கள், சமயபுரம் முதற்கொண்டு எடுத்துக்கொண்டால், மன்னாதி மன்னன் திராவிட மாடல் ஆட்சியின் நாயகனுடைய பெயரை உச்சரிக்கும். ஆகவே, இந்தக் கோபுரம் எந்த வகையிலும் தாமதிக்கப்படவில்லை. எங்குமே இல்லாத அளவுக்கு அதிசயமாகச் செங்கற்களால் கொடுக்கையில் அமைக்கப்பட்ட கோபுரம் அது. அதனைக்கட்டுவதற்கு பாடுபட்ட அந்தநன்கொடையாளர் ஜெயபால் அவர்களுக்கு முன்னாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் என்ற முறையில் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஸ்டிக்கர் ஆட்சி' என்றவுடன் கோபப்படுகிறார்கள். இந்தக் கோபுரப் பணிகளையும் முழுமையாக நிறைவேற்றியது இந்த ஆட்சிதான். அதற்கு ஸ்டிக்கர் ஒட்டத்தான் அமைச்சர் சென்றிருக்கிறார்.

கேள்வி: தொடர்ச்சியாக இந்து சமய அறநிலையத்துறை உங்களுடைய காலத்தில் திறம்படச் செயல்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைக் முன்வைத்துக்கொண்டே இருக்கிறார்?

பதில்: பார்க்கலாம்... இவருடைய திறன் என்ன என்று ஒரு வருடத்தில் காட்டுவோம். ஒன்றுமில்லை, அதிகாரிகளை மிரட்டுவது, "எடுத்தேன், கவிழ்த்தேன்" என்று பேசுவதை மட்டுமே கையில் வைத்திருக்கிறார். திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டிருக்கின்றோம்.

அதை ஒரு கணம் அவர்கள் திருப்பிப் பார்த்தாலே, 50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய மக்கள் பணிகளை 5 ஆண்டுகளில் நிறைவேற்றிய ஆட்சி கடந்த திராவிட மாடல் ஆட்சி என்பது தெரியும்.

"ஆன்மீகம் என்றாலே திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு எதிரானது"என்றொரு பிம்பத்தைக் கட்டமைத்திருந்தார்கள். அந்தப் பிம்பத்தை அடித்துநொறுக்கிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்பதை நான் இங்கு பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த பணிச்சூழலுக்கு

மாணவர்களை தயார் படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12 –

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், ஆகஸ்ட் 10, 2026 அன்று மக்களவையில், செயற்கை நுண்ணறிவின் விரைவான வளர்ச்சிக்கு ஏற்ப தாராளக் கலைக் கல்வியில் தொழில்நுட்ப அறிவு, அறநெறி, படைப்பாற்றல் மற்றும் விமர்சனச் சிந்தனையை ஒருங்கிணைத் தல், உயர்கல்வி நிறுவனங்களில் பல்துறை கல்வியை ஊக்குவித்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த பணிச்சூழலுக்கு மாணவர்களைத் தயார்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் கல்வித் துறை இணை அமைச்சர் டாக்டர் சுகந்த மஜும்தார் அவர்கள் அளித்த பதிலில், தேசிய கல்விக் கொள்கை 2020ன் கீழ் முழுமையான, பல்துறை மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்ட உயர்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். கலை, படைப்பாற்றல் மற்றும் பகுப்பாய்வுப் பாடங்களுடன் செயற்கை நுண்ணறிவு, பெருந்தரவு பகுப்பாய்வு மற்றும் இயந்திரக் கற்றல் போன்ற நவீன தொழில்நுட்பத் துறைகளையும் ஒருங்கிணைத்து கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

பல்கலைக்கழக மானியக் குழுவின் பல்துறை உயர்கல்வி வழிகாட்டுதல்களின் கீழ், 202324 அகில இந்திய உயர்கல்வி ஆய்வின்படி, 500க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் 5,000க்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகளும் பல்துறை கல்வித் திட்டங்களை வழங்கி வருகின்றன. தேசிய கல்விக் கடன் கட்டமைப்பை 700க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் 7,500க்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகளும் ஏற்றுக்கொண்டு ள்ளன. இதன்படி, தாராளக் கலை மாணவர்கள் உட்பட மாணவர்கள் தங்கள் படிப்புக்கான மொத்த கல்விக் கடன்களில் 50 சதவீதம் வரை வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் சார்ந்த திறன் பாடங்கள் மூலம் பெற முடியும்.

ஸ்வயம் இணையவழிக் கல்வித் தளத்தில் 140க்கும் மேற்பட்ட இலவச செயற்கை நுண்ணறிவு சார்ந்த பாடங்கள் வழங்கப்பட்டு வருவதுடன், இதுவரை 50 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் அவற்றில் சேர்ந்துள்ளனர். மேலும், செயற்கை நுண்ணறிவுக்கான திறன் தயார்நிலைத் திட்டத்தின் மூலம் விமர்சனச் சிந்தனை, மின்னணு அறிவுத்திறன் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பணிச்சூழலுக்குத் தேவையான திறன்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதம மந்திரி உயர்கல்வி இயக்கத்தின் கீழ் மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாகவும், பல்துறை கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகங்கள் திட்டத் தின் கீழ் 35 பல்கலைக்கழகங்களுக்கு தலா ரூ.100 கோடி ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், ஒன்றிய அரசின் கல்வித் துறை மாண்புமிகு இணை அமைச்சர் டாக்டர் சுகந்த மஜும்தார் அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களின் உதவியால்

தமிழ்நாட்டின் விவசாயிகளுக்கு குறிப்பிடத்தக்க நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளதா?

மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12–

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 7 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில் பயிர்க் காப்பீட்டு திட்டங்களின் உதவியால். தமிழ் நாட்டின் விவசாயி களுக்கு குறிப்பிடத்தக்க நிதியுதவி ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ளதா? என்றும், வானிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள், பயிர் காப்பீட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாகூர் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

விதைத்தலுக்கு முன்னதாக ஏற்படும் இழப்புகள், அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் ஆகியவற்றிலிருந்து விவசாயிகளை மீட்டு எடுக்க, பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் ஒன்றிய அரசு வழிவகைகளை செய்துள்ளது என்றும், வறட்சி, வெள்ளம், நிலச்சரிவு, புயல், காட்டுத் தீ, அதிகமான மழை ஆகியன காரணங்களால் விவசாயிகளின் பயிருக்கு ஏற்படும் இழப்புகளை தாங்கும் வகையில் பயிர் காப்பீட்டு திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், தோட்டப் பயிர்களுக்கான இழப்புகளை கணக்கிட தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும். மாநில அரசுளின் உரிய காப்பீட்டு பங்கு விவசாயிகளுக்கு அளிக்கப்படாதது,

வங்கிகளினால் உரிய நேரத்தில் பயிர் காப்பீட்டு கட்டணம் செலுத்தப்படாதது, பயிர் விளைச்சல் கணக்கீடுகள் சரியாக தரப்படாதது, போன்ற காரணங்களினால் பயிர் காப்பீட்டு தொகை விவசாயிகளுக்கு முறையாக கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்று ஒன்றிய விவசாயத் துறை இணையமைச்சர் அவர்கள் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

இந்திய விவசாய ஆராய்ச்சி குழுமத்தின் உதவியுடன் பயிர் காப்பீட்டிற்கான வறட்சி மற்றும் வெள்ளத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது என்றும், இந்திய வானிலைத் துறை உதவியுடன் பயிர்காப்பீட்டு 18 மாவட்டங்கள் மிகவும் பாதிப்புக்குள்ளானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், கணினி செயலிகள் மூலம் தேசிய பயிர் பாதுகாப்பு விவரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றது என்றும், உரிய காலத்தில் பயிர் காப்பீடு வழங்கபடா விட்டால் 12 சதவீதம் வட்டி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கபட்டு வருகிறது என்றும், தமிழ்நாட்டில் புயல் நிவாரண நிதி வழங்கப்படும் போது பயிர் காப்பீட்டு தொகைகளும் வழங்கப்பட்டு வருவதாக ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாகூர் அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் ஊர்கள் பகுதிகளில்

திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் சென்றடைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12 –

திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் அவர்கள் பின்வரு வனவற்றைத் தெரிவிக்க முன்வருவாரா என்று திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவரது கேள்வி வருமாறு:

கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டின் ஊரக (rural) மற்றும் முன்னேற விரும்பும் (aspirational) பகுதிகளில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் சென்றடைவை விரிவுபடுத்து வதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முயற்சிகள் என்னென்ன;

குறிப்பிட்ட காலப்பகுதியில் தமிழ்நாட்டின் குறிப்பிட்ட மாவட்டங்களில், பல்வேறு திட்டங்களின் கீழ் தொடங்கப்பட்ட பயிற்சி மையங்கள், பதிவு செய்தவர்கள், பயிற்சி பெற்றவர்கள், சான்றிதழ் பெற்றவர்கள் மற்றும் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் விவரங்களை மாவட்ட வாரியாகத் தெரிவிக்கவும்;

இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக, குறிப்பிட்ட பகுதிகளில் திறன் மேம்பாட்டு உள்கட்டமைப்பு, டிஜிட்டல் பயிற்சி வசதிகள் மற்றும் தொழில்துறை கூட்டாண்மைகளை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுத்து வரும் நடவடிக்கைகள் என்னென்ன;

குறிப்பிட்ட பகுதிகளில் பெண்கள், பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் பிற நலிவடைந்த பிரிவினரிடையே திறன் மேம்பாட்டை ஊக்குவிக்க ஏதேனும் சிறப்பு முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளதா; மற்றும்

தமிழ்நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஆதரவு, தொழில் முனைவோர் மற்றும் தொழிற்பயிற்சி (apprenticeship) வாய்ப்புகளை மேம்படுத்த அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை இணை அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி விரிவாக பதில் அளித்திருந்தார்.

தேசிய – சர்வதேச அளவில் வேலூர் மாவட்டத்தை

சுற்றுலா தலமாக முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12 -

வேலூர் மாவட்டத்தில் பல்வேறு சுற்றுலாத் திட்டப் பணிகளுக்காக ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார். கூடவே சுற்றுலா தலமாக மாற்றப்படுமா என்றும் கேட்டார்.

அவரது கேள்விகள் வருமாறு:

தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் கங்கையம்மன் திருவிழா, வேலூர் நகரத்தின் புஷ்ப பல்லக்கு திருவிழா மற்றும் மலர் தோட்டங்கள், காய்கறிப் பயிரிடும் இடங்கள், மூலிகைத் தோட்டங்கள், பழத் தோட்டங்கள், வெற்றிலை சாகுபடி கொட்டகைகள் மற்றும் கோழிப்பண்ணை ஆகியவற்றைக் கொண்ட 'அறிவுத்தோட்டம்' வேளாண் சுற்றுலா மையம் ஆகியவற்றை, அம்மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களாக ஒன்றிய அரசு மதிப்பிட்டுள்ளதா?

சுற்றுலாப் பயணச் சுற்றுகள் (tourism circuits), விளம்பரப் பிரச்சாரங்கள் மற்றும் சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் மேற்கூறிய இடங்களை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் தருக?

மேற்கூறிய இடங்கள் தொடர்பான சுற்றுலா உள்கட்டமைப்பு, பார்வையாளர்களுக்கான வசதிகள் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அரசு நிதி உதவி ஒதுக்கீடு செய்துள்ளதா? அல்லது நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளதா?

'அறிவுத்தோட்டம்' மூலம் நிலையான மற்றும் ரசாயனமற்ற விவசாயத்தை ஊக்குவிக்கும் அதே வேளையில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் வருகையை ஊக்குவிக்க எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் குறித்த விவரங்கள்; மற்றும்

மேற்கூறிய இடங்களை தேசிய மற்றும் சர்வதேச அளவில் சுற்றுலாத் தலங்களாக முன்னிறுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் தருக?

இவ்வாறு அவர் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலா துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களால் பதிலளிக்கப்பட்ட விவரம் வருமாறு:

சுற்றுலா மேம்பாடு மற்றும் ஊக்குவிப்புப் பணிகள் முதன்மையாக அந்தந்த மாநில அரசுகள் அல்லது யூனியன் பிரதேச நிர்வாகங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. கண்காட்சிகள், திருவிழாக்கள் மற்றும் சுற்றுலா தொடர்பான நிகழ்வுகளை நடத்துவதற்கும், சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய நிதியுதவி (CFA) வழங்குவதன் மூலம் சுற்றுலா அமைச்சகம் இம்முயற்சிகளுக்குத் துணைபுரிகிறது. இத்தகைய நிதியுதவி, திட்ட வழிகாட்டுதல்கள், நிதி இருப்பு மற்றும் சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகத்திடமிருந்து தகுதி யான முன்மொழிவுகளைப் பெறுதல் ஆகியவற்றிற்கு உட்பட்டது.

மேலும், தமிழ்நாடு உட்பட நாட்டின் பல்வேறு சுற்றுலாத் தலங்கள் மற்றும் அனுபவங்களை சுற்றுலா அமைச்சகம் பல்வேறு முன்னெடுப்புகள் மூலம் ஊக்குவித்து வருகிறது. சுற்றுலா கண்காட்சிகளில் பங்கேற்பது, சாலைவழி விளம்பர நிகழ்ச்சிகள் (roadshows) மற்றும் கள ஆய்வுப் பயணங்களை (FAM tours) ஏற்பாடு செய்வது, சமூக ஊடகத் தாக்கத்தை ஏற்படுத்துபவர்களுக்கான (influencers) நிகழ்ச்சிகள், சுற்றுலா நிகழ்வுகளை ஆதரித்தல் மற்றும் நடத்துதல், அத்துடன் டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகத் தகவல்களைப் பரப்புதல் ஆகியவற்றின் மூலம் இந்த ஊக்குவிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குடியாத்தம் கங்கையம்மன் திருவிழா, வேலூர் நகர புஷ்ப பல்லக்கு திருவிழா அல்லது வேலூர் அறிவுத்தோட்டம் வேளாண் சுற்றுலா மையம் ஆகியவற்றிற்காக நிதியுதவி கோரி தமிழ்நாடு அரசிடமிருந்து எந்தவொரு முன்மொழிவையும் அமைச்சகம் பெறவில்லை.

மேலும், குறிப்பிட்ட சுற்றுலாச் சுற்றுப்பாதை (tourism circuit) எதுவும் உருவாக்கப்படவில்லை என்றும், இந்தச் சுற்றுலாத் தலங்களுக்காகத் தனியாக எந்த நிதியுதவியும் அனுமதிக்கப்படவில்லை என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பல்வேறு சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் கண்காட்சிகள், திருவிழாக்கள், சுற்றுலா தொடர்பான நிகழ்வுகள் மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களை நடத்துவதற்காக சுற்றுலா அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்ட நிதியுதவி குறித்த விவரங்களை விரிவாக தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

த.வெ.க. அரசின் மருத்துவத் திட்டங்கள்

காப்பீட்டு நிறுவனத்திற்கு சாதகமாகவும் - ஊழியர்களுக்கு பாதகமாகவும் உள்ளது!

ஓய்வுபெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தினர் குற்றச்சாட்டு!

திருவாரூர், ஆக.12 –

த.வெ.க. அரசு தற்போது அறிவித்துள்ள மருத்துவ காப்பீடு திட்டங்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கு சாதகமாகவும் ஊழியர்களுக்கு பாதகமாகவும், இருப்பதாக ஓய்வு பெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தினர் குற்றம்சாட்டி யுள்ளனர்.

திருவாரூர் மாவட்ட ஓய்வு பெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தின் செயற்குழு மற்றும் பொதுக் குழு கூட்டம் திருவாரூரில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய நிர்வாகிகள் இன்றைக்கு நாட்டு மக்கள் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு காவலர்களின் பங்கு மகத்தானது. ஆனால் நாட்டு மக்களுக்காக தங்களை அற்பணித்து கொண்டு இரவு பகல் பராமல் பணியாற்றும் காவலர்கள் பெரும் ஊதியம் என்பது மிகமிக குறைவானது. காவலர் பணி செம்மையாக அமைந்திடவும், அவர்களது குடும்பங்கள் நலனை பாதுகாத்திடவும் த.வெ.க. அரசு பல்வேறு சிறப்பு திட்டங்களை நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் தவெக அரசு புதிதாக அறிவித்துள்ள மருத்துவக் காப்பீட்டு திட்டமானது ஓய்வு பெற்ற மற்றும் பணியில் உள்ள ஊழியர்களுக்கு பாதகமாகவும், காப்பீட்டு நிறுவனங்களுக்கு சாதகமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவகாப்பீட்டு திட்டத்தில் ஊழல் முறைகேடு நடந்திருக்குமோ என ஐயம் ஏற்பட்டுள்ளதாகவும்,

மத்திய, மாநில அரசுகள் 8வது ஊதிய குழுவின் பரிந்துரையை அனைத்து ஓய்வூதியர்களுக்கும் பாகுபாடின்றி அமல்படுத்த வேண்டும்.குடும்ப பாதுகாப்பு நிதியை ரூ.1.5 லட்சமாக உயர்த்தி வழங்குவதோடு, பணியில் உள்ள காவலர்களின் ஊதியம் தொடர்பாக தவெக தேர்தல் அறிக்கையில் கூறியபடி அரசு சம்பள உயர்வு வழங்க வேண்டும்,

சட்டம் ஒழுங்கு பிரச்சனை யில்லாமல் இருந்திட காவல் நிலைய காவலர் பணியிடங்களை அதிகரிக்க வேண்டும், பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திமுக ஆட்சியில் வழங்கப்பட்ட முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டு திட்ட பலன்கள் , இன்னுயிர் காப்போம் நம்மைகக்காக்கும் 48, இல்லம் தேடி மருத்துவம், மக்களைத் தேடி மருத்து வம் திட்டங்களைப் போல மக்களுக்கு பயன்தரும் உயிர்காக்கும் திட்டங்களை தவெக அரசு தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்பதே அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.